# இந்திய அரசலமைப்பு

## பாடக்குறிப்புக்கள் -1

### Evolution of Indian Constitution/இந்திய அரசியலமைப்பின் வளர்ச்சி

நாகரிக வரலாற்றின் துவக்கத்தில் இருந்தே மனிதனிடம் மூன்று முக்கிய வினாக்கள் எழுந்தன அவை

- **Is Government necessary?**
- அரசாங்கம் தேவையான ஒன்றா?
- **What is the best form of Government?**
  எந்த வகையான அரசாங்கம் சிறந்தது
- **How can we prevent the Government from becoming tyrannical?**
  அரசாங்கம் கொடுங்கோண்மை அரசாக மாறுவதை நாம் எப்படி தடுக்கமுடியும்.

மேலே கேட்கப்பட்டுள்ள மூன்று வினாக்களுக்கான விடை என்பது அரசியலமைப்புத்தன்மை(பொதுவான நோக்கம், செயல்பாடுகளை) மற்றும் அரசியலமைப்புச் சட்டம் ஆகும். அரசியலமைப்பு என்பது ஒரு நாடு உருவாகுவதற்கான அடிப்படையான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை அடிப்படையாக கொண்டது.



கிரேக்க தத்துவவியலாளர் அரிஸ்டாட்டிலின் கூற்றுப்படி மனிதன் என்பவன் அரசியல் மற்றும் சமூகப் பிராணி என வரையறுக்கிறார். மனிதனோ அல்லது குடும்பமோ தனித்து வாழ இயலாது எனவே மனிதன் அவனாகவே சமூகம் மற்றும் குழுவை மக்கள் தொகையின் அடிப்படையில் உருவாக்குகிறான். இந்த சமூகம் வளர்ச்சியடைந்து பல்கிப் பெருகி விதிகளையும் ஒழுங்குமுறைகளையும் தேவைகளுக்கேற்ப உருவாகிறது இதிலிருந்து சட்டம் மற்றும் அரசாங்கம் அமைப்பு உருவாகுவது தேவையாகிறது.

### அரசியலமைப்பு என்றால் என்ன

சுருக்கமாக கூறுவதென்றால் ஒரு நாட்டின் முறைப்படுத்தப்பட்ட ஒழுங்குமுறைகளைக் கொண்ட சட்டத்தொகுப்பாகும்.

அரசியலமைப்பு என்பது அடிப்படையான கொள்கைகளையும் மற்றும் முன்கூட்டியே அடிப்படை விதிகளைக் கொண்டிருக்கும். இது அரசின் அமைப்பினை கண்டறிந்து வரைமுறை செய்து அவற்றின் அதிகாரம் மற்றும் பணிகளையும் அரசின் மூன்று பிரிவுகளான சட்டத்துறை, செயலாற்றும் துறை மற்றும் நீதித்துறை ஆகியவற்றினையும் வரையறை செய்யும். அதே வேளையில் குடிமக்களுக்கான அடிப்படை உரிமைகளையும் வழங்கி அரசு மற்றும் அரசாங்கத்திற்கிடையே குடிமக்களுக்கும் உறவினை நிர்ணயம் செய்யும்.

### இந்திய அரசியலமைப்பின் வளர்ச்சி

இந்திய ஜனநாயகமானது பாராளமன்ற ஜன நாயகத்தினை அதாவது நிர்வாகத்துறையை சட்டமியற்றும் துறைக்கு பொறுப்பாகக் கொண்டதாகும்.பாராளமன்றம் இரண்டு அவைகளைக் கொண்டது மக்களவை மற்றும் மாநிலங்களவை அதே நேரம் கூட்டண்மை வகையான ஆளுகையைக் கொண்டது எடுத்துக்காட்டு மத்திய அளவிலும் , மாநில அளவிலும் தனித்தனியான சட்டமன்றம் மற்றும் நிர்வாகத்துறை இருப்பது. அதே வேளை நாம் உள்ளாட்சி அரசாங்க அமைப்பையும் நாம் கொண்டிருக்கிறோம். இந்த முறையான அமைப்புகள் ப்ரிட்டிஷாரின் ஆட்சிக்காலத்திலிருந்து படிப்படியாக வளர்ச்சியடைந்தவை. இந்த பிரிவில் பல்வேறு காலங்களில் எவ்வாறு இந்திய அரசியலமைப்பு படிப்படியாக வளர்ச்சியடைந்ததைக் காண்போம்.

## ஒழுங்கு முறைச்சட்டம் 1773 (Regulating Act)

- இந்தியாவில் கிழக்கிந்திய கம்பெனியின் மீது பிரிட்டிஷ் அரசால் கொண்டு வரப்பட்ட முதல் சட்டமாகும்.
- கம்பெனியின் அரசியல் மற்றும் நிர்வாக செயல்களை இச்சட்டம் முதன் முதலாக அங்கீகரித்தது.
- இந்தியாவில் மத்திய நிர்வாகம் அமைய வழிவகுத்தது.
- வங்காள கவர்னர் வங்காளத்தின் கவர்னர் ஜெனரல் என அழைக்கப்பட்டார். இவருக்கு உதவியாக நான்கு நபர்களை கொண்ட நிர்வாக குழு அமைக்கப்பட்டது. முதல் கவர்னர் ஜெனரல் வாரன் ஹேஸ்டிங்ஸ் ஆவார்.

- பம்பாய் மற்றும் மெட்ராஸ் மாகாண கவர்னர்கள் வங்காள கவர்னர் ஜெனரலுக்கு உதவியாக செயல்படவேண்டும். ஆனால் இதற்கு முன்பு இந்த மூன்று மாகாணங்களும் தனித்தனியாக செயல்பட்டன.
- கல்கத்தாவில் முதல் உச்சநீதிமன்றம் 1774ல் ஒரு தலைமை நீதிபதி மற்றும் மூன்று நீதிபதிகளை கொண்டு அமைக்கப்பட்டது.
- கம்பெனி தொழிலாளர்கள் தனியார் வணிகம் செய்வதில் இருந்தும், உள்ளூர் மக்களிடம் லஞ்சம் அல்லது பரிசுப் பொருள் பெறுவதில் இருந்தும் தடை செய்யப்பட்டார்கள்.
- இந்த சட்டம் கம்பெனியின் மீது பிரிட்டிஷ் அதிகாரத்தை மேம்படுத்தியதோடு, இந்தியாவில் கம்பெனியின் நிதி, குடிமைப்பணியிலும் இதனுடைய அதிகாரத்தை செலுத்த தொடங்கியது மற்றும் பிரிட்டிஷ் அரசு இந்தியாவில் தங்களுடைய இராணுவ அதிகாரத்தை இயக்குனர்களின் நீதிமன்றம் (Court of Directors) கொண்டு நடைமுறைப்படுத்த இச்சட்டம் வழி வகுத்தது.
- கல்கத்தாவில் போர்ட் வில்லியம் என்ற இடத்தில் உச்சநீதிமன்றம் அமைக்கப்பட்டது.

### பிட் இந்தியா சட்டம் (1784) (Pitt's India Act) *

ஒழுங்குமுறை சட்டம் 1773ல் உள்ள குறைகளை நீக்கி 1784 பிட் இந்திய சட்டம் கொண்டு வரப்பட்டது.

**சிறப்பம்சங்கள்**

- நிர்வாகிகள் குழு வணிக துறையையும், கட்டுபாட்டு வாரியம் (Board of Control) அரசியல் தொடர்பான துறையையும், கட்டுப்படுத்த இச்சட்டம் வழிவகை செய்தது
  - ❖ பிரிட்டிஷ் அரசின் நேரடி அதிகாரத்திற்கு கீழ் கம்பெனியின் நிர்வாகங்கள் இச்சட்டத்தின் மூலமாக கொண்டு வரப்பட்டது.
  - ❖ கம்பெனியின் அரசியல் முறை மற்றும் வருமான துறையை தெளிவாக பிரித்து இச்சட்டம் விளக்கியது.
  - ❖ இதன் மூலமாக இரட்டை அரசாட்சி முறை ஏற்படுத்தப்பட்டது. இச்சட்டம் இந்தியாவில் பிரிட்டிஷ் பிராந்தியத்தின் நிர்வாகம், இராணுவம் மற்றும் வணிகம் போன்ற துறைகளை நிர்வாகம் செய்ய கட்டுபாட்டு வாரியத்திற்கு அதிகாரம் வழங்கியது.
  - ❖ முதன் முதலாக இந்தியாவில் கம்பெனி மாகாணங்கள் பிரிட்டிஷ் மாகணங்களாக அழைக்கப்பட்டது. இரண்டாவது பிரிட்டிஷ் அரசின் கம்பெனி மீதான நேரடி நிர்வாக அதிகாரம் அதிகரித்தது.

### பட்டய சட்டம் 1813 (Charter Act of 1813)

கம்பெனியின் ஏகபோக வர்த்தகம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டாலும் தேயிலை வணிகம் மற்றும் சீனாவுடன் உள்ள வர்த்தக வணிகம் தடை செய்யப்படவில்லை. *

## பட்டய சட்டம் 1833 (Charter Act of 1833)

- வங்காள கவர்னர் ஜெனரல் இந்தியாவின் கவர்னர் ஜெனரல் என்றழைக்கப்பட்டார். குடிமை மற்றும் இராணுவ அதிகாரம் அவருக்கு வழங்கப்பட்டது. இச்சட்டம் முதல் முறையாக இந்தியாவில் உள்ள பிரிட்டிஷ் பகுதிகளை இந்திய அரசுக்கு ஆதிக்கம் செலுத்த அதிகாரம் வழங்கியது. இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல் வில்லியம் பெண்டிங்பிரபு ஆவார்.
- இந்த சட்டம் பிரிட்டிஷ் இந்தியாவின் ஆதிக்கத்தை மையப்படுத்துவதற்கான கடைசி சட்டம் ஆகும்.
- கம்பெனியின் இந்தியா மீதான வணிக உரிமை முழுவதுமாக நீக்கப்பட்டாலும் இதன் நிர்வாகம் மற்றும் அரசியல் அதிகாரங்கள் தொடர்ந்து இருந்து வந்தன..
- இந்தியாவைல் மையச்சட்டப்பேரவை அமைவதற்கான ஆரம்பமாகும்.பம்பாய் மற்றும் மெட்ராஸ் கவர்னர்கள் தங்களின் சட்டமியற்றும் அதிகாரத்தை இழந்தனர்.

## பட்டய சட்டம் 1853 (Charter Act of 1853)

- அரசின் பாராளுமன்ற முறையை - அறிமுகப்படுத்தியது. கவர்னர் ஜெனரல் குழுவில், நிர்வாகம், சட்டசபை செயல்கள் என முதன் முதலாக பிரிக்கப்பட்டது. சட்டசபையானது பிரிட்டிஷ் பாராளுமன்றத்தை போன்றே அமைக்கப்பட்டது.
- குழுவில் கூடுதலாக 6 புதிய சட்டமன்ற கவுன்சிலர்கள் சேர்க்கப்பட்டனர். கவர்னர் ஜெனரல் கவுன்சிலில் உள்ள 6 நபர்களில் 4 நபர்கள் மெட்ராஸ், பம்பாய், வங்காளம் மற்றும் ஆக்ரா போன்ற மாகாண அரசால் நிர்ணயிக்கப்பட்டனர்.
- இந்திய குடிமை பணிக்கு தேர்வு செய்ய பொது போட்டி தேர்வு முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தியா களுக்கும் இதில் அனுமதி வழங்கப்பட்டது

## இந்திய அரசு சட்டம் 1858 (Government of India Act 1858)

- இச்சட்டம் இந்திய அரசை இங்கிலாந்து ராணியின் நேரடி ஆட்சியின் கீழ் கொண்டு வருவதற்காக இயற்றப்பட்டது. இளவரசியின் சார்பில் மேற்பார்வை செய்ய இந்தியாவிற்கான அரசுச் செயலர் ஒருவர் நியமிக்கப்பட்டா
- இச்சட்டத்தின் மூலம் கம்பெனியின் அதிகாரங்கள், பிராந்திய அதிகாரங்கள், வருமான அதிகாரங்கள் போன்றவை பிரிட்டிஷ் அரசிற்கு மாற்றப்பட்டது இந்தியாவின் கவர்னர் ஜெனரல் இந்தயாவின் வைஸ்ராய் என்று அழைக்கப்பட்டார். வைஸ்ராய் இந்தியாவிற்கான இங்கிலாந்து அரசின் நேரடி பிரதிநிதியாவார். கானிங் பிரபு இந்தியாவின் முதல் வைஸ்ராய்.
- வெளியுறவு செயலாளருக்கு உதவுவதற்காக 15 உறுப்பினர்களை கொண்ட இந்திய கவுன்சில்களை அமைத்தது.

## இந்தியக் கவுன்சிலகள் சட்டம் Indian Councils Act of 1861

- இச்சட்டம் முதல்முறையாக வைசிராயின் அமைப்பில் இந்தியகர்களை அலுவல் சாரா உறுப்பினர்களாக சேர்த்துக் கொண்டது. இதன்படி மூன்று உறுப்பினர்கள்

சேர்ந்த்துகுக்கொள்ளப்பட்டனர்.சட்டசபைக் கவுன்சிலகள் மத்தியிலும் மா நிலத்திலும் அமைக்கப்பட்டன

- வைசிராயின் செயற்குழுவில் சில இந்தியர்களை அலுவல் சாரா உறுப்பினர்களாக நியமிப்பதற்கு வழிவகை செய்தது
- இலக்கா வாரியான முறைக்கு சட்டமுறை அங்கீகாரம் வழங்கியது
- மெட்ராஸ் மற்றும் பம்பாய் மகாணங்களுக்கு அதிகாரம் வழங்கி அதிகாரப்பரவலாக்களுக்கு முன்னெடுப்பு செய்தது

### இந்தியக் கவுன்சிலகள் சட்டம் India Council Act of 1892

- மறைமுகத் தேர்தலை அறிமுகப்படுத்தியது
- சட்டபேரவையின் அளவினை அதிகாரப்படுத்தியது
- சட்டப்பேரவையின் செயல்பாடுகளை விரிவாக்கி சில அதிகாரங்களை கொடுத்தது அதாவது பட்ஜெட்டின் போது விவாதம் மேலும் செயலாட்சித்துறையின் மீது கேள்வி கேட்பது போன்றவை

### 1909ஆவது சட்டத்தின் சிறப்பு அம்சங்கள்

- இச்சட்டம் மார்லி - மிண்டோ சீர்தருத்தம் என்று அழைக்கப்படுகிறது. மார்லி பிரபு இந்தியாவிற்கான இங்கிலாந்து செயலாளர் ஆவார், மின்டோ பிரபு இந்தியாவின் வைஸ்ராய்.
- சட்டப்பேரவைகளுக்கு நேரடித்தேர்தலை அறிமுகப்படுத்தியது
- மத்திய மற்றும் மாகாணத்தில் சட்ட மேலவை உறுப்பினர் எண்ணிக்கை போதுமான அள அதிகரித்தது. மத்திய மேலவையின் உறுப்பின எண்ணிக்கை 16லிருந்து 60க்கு அதிகரித்தது மாகாணங்களில் சட்ட மேலவைகளில் உறுப்பினர்கள் எண்ணிக்கை சமமாக இல்லை
- மத்திய சட்ட மேலவையில் அலுவலர்களில் எண்ணிக்கையின் பெரும்பான்மை தொடர்ந்து. நிலைநிறுத்தப்பட்டது. ஆனால் மாகாணாமேலவையில் அலுவல் சார்பற்றவர்களில் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது.
- மத்திய, மாகாண சட்டமேலவையின் அதிகாரம் அதிகரிக்கப்பட்டது. உதாரணமாக உறுப்பினர்கள் பட்ஜெட் வரவு, செலவு திட்டம்) தொடர்பான துளை கேள்விகளையும், சில முடிவுகளையு எடுக்கலாம். முதல் முறையாக இந்தியர்களுக்கு வைஸ்ராயின் நிர்வாகிகள் குழுவிலும் (Viceroy Executiv Council) கவர்னர் நிர்வாகிகள் கவுன்சிலிலு உறுப்பினர்கள் அந்தஸ்து வழங்கப்பட்டது சத்தியேந்திர பிரசாத் சின்ஹா முதல் இந்திய ஆவார். இவர் சட்ட உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.
- தனி வாக்காளர் தொகுதி தனி பிரதிநிதித்துவ முறைப்படி முஸ்லீம்களுக்கு வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறை அறிமுகப்படுத்தப்பட்டது இதன்படி முஸ்லீம்கள் முஸ்லீம். உறுப்பினர்களை மட்டும் தேர்ந்தெடுத்தனர்.

## 1919 இந்திய அரசு சட்டம்

### மான்டேகு - செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் (1919)

முதல் உலகப் போர் காலத்தில் நடைபெற்ற தன்னாட்சி இயக்கம் போன்ற அரசியல் நடவடிக்கைகளின் பலனாக ஆகஸ்ட் அறிக்கை வெளியிடப்பட்டது. 1917 ஆகஸ்டு 20 ஆம் நாள் இந்தியாவிற்கான அயலுறவுச் செயலர் மான்டேகு, காமன்ஸ் சபையில் ஒரு முக்கிய அறிக்கையை வெளியிட்டார். இந்தியாவில் படிப்படியாக பொறுப்புள்ள அரசாங்கம் அறிமுகப்படுத்தப்படும் என்று அவரது அறிக்கையில் உறுதியளிக்கப்பட்டது. அதன் முதல் தவணையாக இங்கிலாந்து நாடாளுமன்றம் 1919 ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டத்தை நிறைவேற்றியது. இந்த சட்டமே மான்டேகு - செம்புபோர்டு சீர்திருத்தங்கள் பிள அழைக்கப்படுகிறது. அப்போது இந்தியாவின் தலைமை ஆளுநராக இருந்தவர் செம்ஸ்போர்டு பிரபு ஆவார்.

**இச்சட்டத்தின் முக்கிய கூறுகளாவன :**

- மாகாணங்களில் இரட்டையாட்சி நடைமுறைப்படுத்தப்பட்டது. மாகாண அதிகாரங்கள் யாவும் "ஒதுக்கப்பட்ட தகறைகள் எனவும் "மாற்றப்பட்ட துறைகள்" எனவும் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. ஒதுக்கப்பட்ட துறைகளின் கீழ் காவல் துறை, சிறைச்சாளர்கள், நிலவருவாய், நீர்ப்பாசனம், வனங்கள் போன்ற துறைகளும், மாற்றப்பட்ட துறைகளின் கீழ், கல்வி, உள்ளாட்சி அமைப்புகள், பொது சுகாதாரம், துப்புரவு, வேளாண்மை மற்றும் தொழில்கள் போன்ற துறைகளும் இருந்தன, ஒதுக்கப்பட்ட துறைகள் ஆளுநர் மற்றும் அவரது நிர்வாகக் குழுவின் நிர்வாகத்தில் இயங்கின. மாற்றப்பட்ட துறைகளை ஆளுநரும் அவரது அமைச்சர்களும் நிர்வகித்தனர்.
- மத்தியில் இரண்டு அவைகளைக் கொண்ட சட்டமன்றம் ஏற்படுத்தப் பட்டது. மாநிலங்களவை என்றும் சட்டப்பேரவை என்றும் இவை அழைக் சுப்பட்டன. சட்டப்பேரவையில் இருந்த மொத்தம் 145 உறுப்பினர்களில் 105 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகவும் எஞ்சிய 40 பேர் நியமிக்கப்பட்டவர்களாகவும் இருந்தனர். மாநிலங்களவையிலிருந்த அதிகபட்ச உறுப்பினர்களான 60 பேரில் 34 பேர் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள், எஞ்சிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டவர்கள்.
- இந்தியாவுக்கான அயலுறவுச் செயலர் மற்றும் அவரது உதவியாளர்களுக்கான ஊதியம் இனி பிரிட்டிஷ் வருவாயிலிருந்தே அளிக்கப்படும். இதுவரை, இந்திய வருவாயிலிருந்தே அவர்களுக்கு ஊதியம் அளிக்கப்பட்டு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.
- லண்டனில், இந்தியாவுக்கான உயர் ஆணையர் (தூதர்) ஒருவர் நியமிக்கப்பட்டார்.
- பொதுப்பணியாளர் தேர்வாணையம் அமைக்கவும் வழிவகை செய்தது
- சீக்கியர்கள்,ஆங்கிலோ இந்தியர்கள், கிறிஸ்துவர்கள்,சீக்கியர்கள் ஆகியோருக்கு தனித்தொகுதி வழங்கியது.

## 1935 ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டம்

சைமன் குழு அளித்த அறிக்கை, வட்டமே மசை மாநாடுகளின் நடவடிக்கைகள் மற்றும் 1933 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசாங்கம் அளித்த வெள்ளை அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் 1935 ஆண்டு இந்திய அரசுச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. 1919 ஆம் ஆண்டு சட்டத்தில் இந்த சட்டம் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. இச்சட்டத்தின் சிறப்புக் கூறுகள் வருமாறு :

- ❖ பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்த மாகாணங்கள் மற்றும் சுதேச அரசுகள் அடங்கிய அனைத்திந்திய கூட்டாட்சி ஒன்று மத்தியில் உருவாக்க வழிவகை செய்யப்பட்டது. (சுதேச அரசுகள் இதற்கு உடன்பட மறுத்தமையால் கூட்டாட்சி உருவாக்கப்படவில்லை).
- ❖ மத்திய அரசின் அதிகாரங்கள் மூன்று பட்டியல்களாக பிரிக்கப்பட்டது – கூட்டாட்சிப் பட்டியல், மாகாண பட்டியல் மற்றும் பொதுப் பட்டியல்,
- ❖ மத்தியில் இரட்டையாட்சி கொண்டு வரப்பட்டது, ஒதுக்கப்பட்ட துறைகள் தலைமை ஆளுநர் மற்றும் அவரது நிர்வாகக் குழுவின் கட்டுப்பாட்டில் இருந்தன. மாற்றப்பட்ட துறைகள் அமைச்சரவையின் பொறுப்பில் விடப்பட்டன.
- ❖ மாகாணங்களில் இரட்டையாட்சி ஒழிக்கப்பட்டு, மாகாண சுயாட்சி அறிமுகப்படுத்தப்பட்டது. மாகாண நிர்வாகக்குழுவின் தலைவராக ஆளுநர் இருப்பார். அமைச்சரவையின் ஆலோசனைகளின்பேரில் அவர் நிர்வாகத்தை நடத்துவார். எனவே, மாகாண அரசாங்கம் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்களின் பொறுப்பில் விடப்பட்டது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண சட்டப்பேரவைக்கு அவர்கள் பொறுப்புள்ளவர்களாவர்.
- ❖ வங்காளம், சென்னை, பம்பாய், ஐக்கிய மாகாணம், பீகார் மற்றும் அஸ்ஸாம் மாகாணங்களில் இரண்டு அவைகளைக் கொண்ட சட்டமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன,
- ❖ சீக்கியர்கள், ஐரோப்பியர்கள், இந்திய கிறித்துவர்கள் மற்றும் ஆங்கிலோ இந்தியர்களுக்கும் தனித்தொகுதி முறை விரிவு படுத்தப்பட்டது.
- ❖ ஒரு தலைமை நீதிபதி, ஆறு நீதிபதிகள் கொண்ட கூட்டாட்சி நீதிமன்றம் டெல்லியில் நிறுவப்பட்டது.

**இந்திய விடுதலைச்சட்டம் (1947)**

மௌன்ட்பேட்டன் திட்டத்தை ஏற்றுக்கொண்ட பிரிட்டிஷ் அரசாங்கம் 1947 ஜூலை 18 ஆம் நாள் இந்திய விடுதலை சட்டத்தை நிறைவேற்றியது.

**இந்த சட்டத்தின் முக்கிய கூறுகள்:**

- ❖ இந்திய – பாகிஸ்தான் பிரிவினை 1947 ஆகஸ்டு 15 முதல் நடைமுறைக்கு வரும்,
- ❖ பிரிட்டிஷ் அரசாங்கம் அனைத்து அதிகாரங்களையும் இவ்விரண்டு நாடுகளிடமும் வழங்கும்.
- ❖ பஞ்சாப், வங்காளம் இவ்விரண்டு மாகாணங்களின் எல்லைகளை வரையறுப்பதற்கு எல்லை வரையறுக்கும் ஆணையம் ஏற்படுத்தப்படும்.

- இவ்விரண்டு நாடுகளின் அரசியலமைப்பு குழுக்களுக்கு அரசியலமைப்பை உருவாக்கும் அதிகாரங்கள் வழங்கப்படும்.

### சைமன் குழு (1927)

1919 ஆம் ஆண்டு சட்டம் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு அதன் செயல்பாடுகள் மறு ஆய்வு செய்யப்படவேண்டும் சான்று விதித்திருந்தது. - இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே, 1927 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசாங்கம் மறு ஆய்வுக்குழு ஒன்றை நியமித்தது. இக்குழுவின் தலைவரான சர் ஜான் சைமன் என்பவரது பெயராலேயே சைமன் குழு' என்று இது அழைக்கப்பட்டது. இதில் இடம்பெற்றிருந்த ஏழு உறுப்பினர்களும் ஆங்கிலேயர்களாவர், இதில் ஒரு இந்திய உறுப்பினர்கூட இடம் பெறாமையால், இந்தியாவுக்கு வந்தடையும் முன்பே இக்குழுவிற்கு பலத்த எதிர்ப்புகள் தோன்றினா, காங்கிரஸ் உள்ளிட்ட பல அரசியல் கட்சிகள் இக்குழுவை எதிர்த்தன.

1930 மே மாதம் சைமன் குழு அறிக்கை வெளியிடப்பட்டது. இரட்டையாட்சியின் குறைபாடுகளை இது சுட்டிக்காட்டியது. அதற்குப்பதில் மாநில சுயாட்சியை இக்குழு பரிந்துரைத்தது. 1935 ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டத்திற்கு இக்குழுவின் அறிக்கை அடிப்படையாக விளங்கியது என்பதில் ஐயமில்லை

### நேரு அறிக்கை (1928)

இதற்கிடையில் இங்கிலாந்தின் அயலுறவுச் செயலாளர் பிர்கன் ஹெட் பிரபு அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியலமைப்பை உருவாக்க முடியுமா என்று கேட்டு இந்தியர்களுக்கு சவால் விடுத்தார். இந்த சவாலை சரற்ற காங்கிரஸ் 1928 பிப்ரவரி 28ல் அனைத்துக் கட்சி கட்டத்தைக் கூட்டியது. எதிர்காலம் இந்தியாவின் அரசியலமைப்பு சட்டம் ஒன்றை வகரைவதற்கு எட்டுபேர் கொண்ட குழு ஏற்படுத்தப்பட்டது. இதன் தாயகராக மோதிலால் நேரு நியமிக்கப்பட்டார்.

இக்குழுவின் அறிக்கையே 'நேரு அறிக்கை' எனப்படுகிறது, இந்த அறிக்கையின் சிறப்புக் கூறுகளாவன :

- நிலையாக டொமினியன் அந்தஸ்து வழங்கப்படுதல்
- மத்தியில் முழுப் பொறுப்பு வாய்ந்த அரசு
- மாகாணங்களுக்கு சுயாட்சி
- மத்திய மாகானா அரசுகளுக்கிடையே தெளிவான அதிகாரப்பகிர்வு.
- மத்தியில் இரண்டு அவைகள் கொண்ட சட்டமன்றம்

முஸ்லிம் லீக் தலைவரான முகமது அலி ஜின்னா, நேரு அறிக்கை முஸ்லிம் மக்களின் நலனுக்கு எதிரானது என்று கருதினார். அகில இந்திய முஸ்லீம்கள் மாநாட்டை கூட்டிய ஜின்னா, தனது பதினான்கு அம்ச கோரிக்கைகளை வெளியிட்டார்,

### பூனா ஒப்பந்தம் (1932)

1930 ஆம் ஆண்டு வாக்கில், டாக்டர் அம்பேத்கர் தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்களுக்காக போராடும் தேசிய அளவிலான தலைவராக உருவெடுத்தார். முதல் வட்டமேசை மாநாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களின் உண்மை நிலையை எடுத்துரைத்த அம்பேத்கர், அவர்களுக்கு தனித்தொகுதி ஒதுக்கப்படவேண்டும் என்று கோரினார். 1932 ஆகஸ்டு 16 ஆம் நாள் பிரிட்டிஷ் பிரதமர் ராம்சே மெக்டொனால்ட் தனது "வகுப்புக் கொடை"யை அறிவித்தார். இதன்படி, தாழ்த்தப்பட்ட மக்கள் தனி வகுப்பினராகக் கருதப்பட்டு அவர்களுக்கு தனித்தொகுதி வழங்கப்படும் என்று கூறப்பட்டது. "வகுப்புக் கொடை'டையை எதிர்த்து மகாத்மா காந்தி 1932 செப்டம்பர் 20ஆம் நாள் எரவாடா சிறையில் சாகும் 63வரை 3 கண்ணாவிரத போராட்டத்தை தொடங்கினார்.

இறுதியில் டாக்டர் அம்பேத்கருக்கும் காந்திக்கும் இடையில் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. இதுவே 'பூனா ஒப்பந்தம்' எனப்படுகிறது. பிரிட்டிஷ் அரசாங்கமும் இதனை ஏற்றுக்கொண்டது. இந்த ஒப்பந்தப்படி, பல்வேறு மாகாண சட்டமன்றங்களில் 148 இடங்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு காங்கிரஸ் ஒதுக்கீடு செய்தது, 4வகுப்புக் கொடையின்படி 71 இடங்களே இவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது.

1932ல் மூன்றாவது வட்டமேசை மாநாடு முடிவடைந்தது. மறுபடியும் காங்கிரஸ் இதனை புறக்கணித்தது. இருப்பினும், 19:33 மார்ச்சில் பிரிட்டிஷ் அரசாங்கம் வெள்ளை அறிக்கையை வெளியிட்டது. 1935 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம் வெள்ளை அறிக்கையின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டது.

### கிரிப்ஸ் தூதுக்குழு (1942)

வைஸ்ராய் லின்லித்கோ பிரபு 1941 ஜூலையில் மேலும் நான்கு இந்தியர்களை தனது நிர்வாகக் குழுவில் சேர்த்துக் கொண்டார். போர்க்காலத்தில் நிலவிய மோசமான சூழ்நிலையைக் கருதி இந்தியர்களின் ஒத்துழைப்பை பெறும் நோக்கத்துடன் பிரிட்டிஷ் அரசாங்கம் 1942 மார்ச் 23 ஆம் நாள் சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் என்பவரை இந்தியாவிற்கு அனுப்பி வைத்தது.

**சர் ஸ்டாபோர்டு கீரிப்ஸின் முக்கிய பரிந்துரைகள் :**

- இந்தியாவிற்கு டொமினியன் அந்தஸ்து வழங்கப்படும்.
- சிறுபான்மையினர் பாதுகாப்பு - சுதேச அரசுகள் மற்றும் பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு அரசியலமைப்புக்குழு ஏற்படுத்தப்படும்.
- பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள எந்த மாகானா மாவது இந்த அரசியலமைப்பை ஏற்க மறுக்கும் பட்சத்தில் தற்போதைய நிலையில் தொடரவோ அல்லது தங்களுக்கென தனி அரசியலமைப்பை வலரந்து கொள்ளவோ அனுமதிக்கப்படும்.

கிரிப்சின் யோசனைகளை நாட்டின் பெரும்பாலான அரசியல் கட்சிகள் ஏற்கவில்லை. காந்தி கிரிப்சின் யோசனைகளை "பின் தேதியிட்ட காசோலை' என்று வர்ணித்தார். கதேச அரசுகள் விரும்பினால் அரசியலமைப்பு குழுவிற்கு தனது பிரதிநிதிகளை அனுப்பலாம் அல்லது

இந்திய ஒன்றியத்திலிருந்து விலகியே இருக்கலாம் என்ற யோசனையை அரசியல் கட்சிகள் ஏற்கவில்லை. பாகிஸ்தான் கோரிக்கை ஏற்கப்படாததால் முஸ்லீம் லீக் இதனை நிராகரித்தது.

### காபினட் தூதுக்குழு (1946)

இரண்டாம் உலகப் போருக்குப்பின், இங்கிலாந்து பிரதமராக அட்லி பிரபு பொறுப்பேற்றார். 1946 மார்ச் 15 ஆம் நாள் அவர் வெளியிட்ட அறிக்கையில் இந்தியாவின் சுயநிர்ணய உரிமையை ஏற்றதுடன் இந்திய அரசியலமைப்பை உருவாக்குவதற்கு ஒப்புதலையும் வழங்கினார். பிரிட்டிஷ் அமைச்சரவையைச் சேர்ந்த மூன்று பேர்–பெதிக் லாரன்ஸ், சர் ஸ்டாபோர்டு கிரிப்பும், 47.பி. அலெக்சாந்தர் - கொண்ட குழுவே இந்தியாவிற்கு அனுப்பி வைத்தார். இதுவே 'காபினட் தூதுக்குழு' என்ற பெயரைப் பெற்றது.

காபினட் தூதுக்குழு இந்தியாவின் அரசியலமைப்பு சிக்கலுக்கு ஒரு தீர்வை முன் வைத்தது. இதன்படி மாகாணங்கள் மூன்று குழுக்களாக பிரிக்கப்பட்டு தனித்தனி அரசியலமைப்புகளின் கீழ் இயங்கும். பிரிட்டிஷ் இந்திய மாகாணங்கள், சுதேச அரசுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய இந்திய ஒன் றியம் ஒன்றையும் அது முன்மொழிந்தது. இந்த ஒன்றியம், அயலுறவுக் கொள்கை, பாதுகாப்பு, தகவல் தொடர்பு போன்றவற்றை தமது கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு எஞ்சிய அதிகாரங்களை மாகாணங்களிடமே ஒப்படைக்க வேண்டும். புதிய அரசியலமைப்பு எழுதப்பட்டு புதிய அரசாங்கம் பதவி ஏற்கும் வரை இடைக்கால அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தவும் யோசனை கூறப்பட்டது. முஸ்லிம் லீக், காங்கிரஸ் இரண்டுமே இத்திட்டத்தை ஒப்புக் கொண்டன.

1946 ஜூலையில் அரசியலமைப்புக் குழுவிற்கான தேர்தல்கள் நடைபெற்றன, 214 பொதுத் தொகுதிகளில் 205ல் காங்கிரஸ் வெற்றி பெற்றது. முஸ்லிம் லீக் 78ல் 73ல் வெற்றி பெற்றது. 1946 செப்டம்பர் 2 ஆம் நாள் ஜவஹர்லால் நேரு தலைமையில் இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட்டது.

### மௌன்ட்பேட்டன் திட்டம் (1947)

1947 பிப்ரவரி 20 ஆம் நாள் பிரதமர் அட்லி காமன் அவையில் 1948 ஜூன் மாதத்திற்கு முன்பு இந்தியர்களிடம் ஆட்சி அதிகாரம் மாற்றப்படும் என்ற பிரிட்டிஷ் அரசின் திடமான எண்ணத்தை அறிவித்தார். இதனை நிறைவேற்றுவதற்கு, மௌன்ட் பேட்டன் பிரபுவை இந்தியாவின் வைஸ்ராயாக அனுப்புவது என்றும் அவர் முடிவு செய்தார்.

1947 மார்ச் 24 ஆம் நாள் மிகுந்த அதிகாரங்களுடன் மவுன்ட்பேட்டன் பிரபு இந்தியாவின் வைஸ்ராயாக பதவியேற்றார். இந்தியாவை பிரித்து பாகிஸ்தானை உருவாக்குவது என்பது தவிர்க்க முடியாதது என்று அவர் கருதினார். நீண்ட விவாதங்களுக்குப் பிறகு 1947 ஜூன் 3 ஆம் நாள் இந்தியப் பிரிவினைக்கான தனது திட்டத்தை அவர் அறிவித்தார். காங்கிரசும், முஸ்லீம்லீக்கும் இத்திட்டத்தை ஒப்புக்கொண்டன.

## இந்திய அரசமைப்பு உருவாக்கம்

இந்திய அரசமைப்பு அவை 1946 ஆம் ஆண்டில் அமைச்சரவை குழுவின் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டது. 1946 ஆம் ஆண்டு ஜூலையில் அரசமைப்பு அவைக்கான உறுப்பினர்கள்

பிரதேச சட்டமன்றங்களால் (Provincial Assemblies) 292 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். மன்னர் ஆட்சி புரிந்த மாகாணங்களின் பிரதிநிதிகள் 93 உறுப்பினர்கள் உள்பட மொத்தம் 389 உறுப்பினர்கள் இதில் இடம் பெற்றிருந்தனர். இந்த அவையின் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பிரதிநிதிகள் (representatives) ஆவர். எனவே அரசமைப்பு அவையின் உறுப்பினர் நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்லர்.

இந்திய அரசமைப்பு அவையின் முதல் கூட்டம் 1946 ஆம் ஆண்டின் டிசம்பர் 9 ஆம் நாள் நடைபெற்றது. இந்த மாமன்றத்தின் உறுப்பினர்கள் மிகச் சிறப்பும், பெருமையும் வாய்ந்தவர்கள் ஆவர். அவர்களில் சிலர் ஜவஹர்லால் நேரு, இராஜேந்திர பிரசாத், சர்தார் வல்லபாய் படேல், அபுல் கலாம் ஆசாத்,

கே.எம்.முன்ஷி, ஜி.பி.பந்த், கோபாலசுவாமி அய்யங்கார், டி.டி.கிருஷ்ணமாச்சாரி, டாக்டர் எஸ் இராதாகிருஷ்ணன் , அல் லாடி கிருஷ்ணசாமி அய்யர், எச்.என். குன்ஸ்ரு, புருஷோத்தம் தாஸ் தாண்டண், பி.ஜி.கெர், எம்.ஆர். மசானி, டாக்டர் ஜயகர், டாக்டர். சச்சிதானந்த சின்ஹா, அப்துல் கபார்கான் போன்ற வர்கள். மகாத்மா காந்தி இந்திய அரசமைப்பு அவையின் உறுப்பினர் அல்லர். முதல் கூட்டம் 1946 ஆம் ஆண்டு டிசம்பர் 9ஆம் நாள் நடைப்பெற்றது. டிசம்பர் 11 ஆம் தேதி டாக்டர் இராஜேந்திர பிரசாத் இந்த அவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். டிசம்பர் 13 ஆம் நாள் இந்த அவையில் ஜவஹர்லால் நேருவால், அரசமைப்பு அவையின் குறிக்கோள்கள் பற்றிய தீர்மானம் முன்மொழியப்பட்டது.

1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு 29ஆம் நாள் டாக்டர். பி.ஆர். அம்பேத்கர் தலைமையில் ஒரு வரைவுக்குழு (Drafting Committee) நியமிக்கப்பட்டது. பல்வேறு பொருள்கள் குறித்து விரிவாக ஆராய குழுக்கள் பல நியமிக்கப் பட்டன. இந்தக் குழுக்கள் தயாரித்த அறிக்கைகள் அரசமைப்பு அவையில், பின்னர் சமர்ப்பிக்கப்பட்டன. இந்த அறிக்கைகளின் அடிப்படையில் அரசமைப்பு ஆலோசகர் டாக்டர். பி.என்.ராவ் அவர்களால் வரைவு அரசமைப்புச் சட்டம் (Draft Constitution) ஒன்று உருவாக்கப்பட்டது. டாக்டர் அம்பேத்கர் தலைமையின் கீழ், வரைவுக்குழு, இதை ஆராய்ந்து 315 உறுப்புகள் மற்றும் 8 அட்டவணைகள் கொண்ட அரசமைப்பு வரைவு ஒன்றினை உருவாக்கியது. இதனை அரசமைப்புக்குழு விரிவாகக் கவனத்தில் கொண்டு ஆராய்ந்து விவாதித்தது. பின்னர் இறுதியாக 395 உறுப்புகளும் 8 அட்டவணைகளும் கொண்ட வரைவினை அரசமைப்புக்குழு ஒப்புக் கொண்டது. இது 1948 ஆம் ஆண்டு ஜனவரியில் வெளியானது. இந்த வரைவினை விவாதிக்கவும், திருத்தங்களை முன்மொழியவும், குடிமக்களுக்கு 8 மாத காலஅவகாசம் கொடுக்கப்பட்டது. இறுதியாகப் புதிய அரசமைப்புச் சட்டம், அரசமைப்பு அவையினால் 1949 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் நாள் ஏற்கப்பட்டது. அரசமைப்புச் சட்டத்தை உருவாக்க எடுக்கப்பட்ட கால அளவானது இரண்டு ஆண்டுகள் பதினொரு மாதங்கள் 18 நாள்கள் ஆகும். அரசியலமைப்பின் சட்ட சரத்துக்கள் எண் 5 முதல் 9, 60, 324, 366, 367, 372, 380, 391 முதல் 393 ஆகியவை உடனடியாக செயலுக்கு வந்தன. மற்றவை 1950 ஜனவரி 26 ஆம் நாள் முதல் செயலுக்கு வந்தன. அரசமைப்பு அவை, அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கியதோடு அல்லாமல் வேறுசில பணிகளையும் ஆற்றியது என்பது குறிப்பிடத்தக்கது.

அரசமைப்பு அவை, நாடாளுமன்றமாகவும் செயல்பட்டது. இது பல சட்டங்களை இயற்றியது. தேசியக் கொடி, தேசிய கீதம், ஆகியவற்றை ஏற்றுக் கொண்டது. இந்தியக் குடியரசுத் தலைவருக்கான தேர்தலையும் மேற்கொண்டது.

## அரசியல் நிர்ணய சபை

அரசியல் சட்டத்தை வகுப்பதற்கான அரசியல்சட்ட நிர்ணய சபை 9.12.1946-ல் முதல்முறையாகக் கூடியது. நாடாளுமன்றத்தின் மைய மண்டபம் என்று இப்போது அழைக்கப்படும் இடத்தில்தான் அரசியல் சட்ட நிர்ணய சபை கூடியது. இந்தச் சபையின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 389 என்று முதலில் நிர்ணயிக்கப்பட்டது. பாகிஸ்தான் தனி நாடாகப் பிரிந்ததாலும், சில சமஸ்தானங்கள் உறுப்பினர் தகுதியை இழந்ததாலும் இந்தியப் பகுதிக்கான அரசியல் சட்ட நிர்ணய சபையின் உறுப்பினர் எண்ணிக்கை 299 ஆகக் குறைந்தது. இவற்றுள் 207 உறுப்பினர்கள் பல்வேறு மாகாண சட்டசபைகளிலிருந்து பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். சுதேச சமஸ்தானங்கள் 93 பிரதிநிதிகளை அனுப்பின. 4 பிரதான மாகாணங்களிலிருந்து 4 பேர் சேர்க்கப்பட்டனர்.

13.2.1946-ல் இந்த சபைக்கான நோக்கங்களைத் தெரிவிக்கும் தீர்மானத்தை ஜவாஹர்லால் நேரு முன்மொழிந்தார். 22.1.1947-ல் இந்தத் தீர்மானம் ஏற்கப்பட்டது. 14.8.1947-ல் இந்த சபை கூடி, சட்டத்தை வகுக்கும் பணியைத் தொடங்கியது. 29.8.1947-ல் அரசியல் சட்டத்தை வகுக்கும் குழு, டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் தலைமையில் அமைக்கப்பட்டது. அரசியல் சட்ட நிர்ணய சபைக்கு முதலில் சச்சிதானந்த சின்ஹா தலைவரானார். பிறகு, பாபு ராஜேந்திர பிரசாத் தலைமையேற்றார். ஹரேந்திர குமார் முகர்ஜி என்ற வங்காள கிறிஸ்தவர் துணைத் தலைவரானார்.

இந்த அரசியல் சட்ட நிர்ணய சபை, பல்வேறு குழுக்களாகப் பிரிந்து பணி செய்தது. பாபு ராஜேந்திர பிரசாத் 4 குழுக்களுக்குத் தலைவராக இருந்தார். நிர்ணய சபைக்கான விதிகளை வகுக்கும் குழு, வழிகாட்டும் குழு, நிர்ணய சபைக்காகும் நிதியை நிர்வகித்தல், ஊழியர்களை அமர்த்துதல் ஆகியவற்றுக்கான குழு, தேசியக் குடியைத் தேர்வுசெய்யும் குழு ஆகியவற்றுக்கு அவர் தலைவராகத் திகழ்ந்தார்.

## Important Committee of the Constitution

### அரசியலமைப்பு உருவாக்கத்தின் முக்கிய குழுக்கள்

| Sr. No. | Name of the Committee | Chairman |
|---|---|---|
| 1 | Committee on the Rules of Procedure<br>செயல்முறை விதிகளுக்கான குழு | Rajendra Prasad<br>ராஜேந்திர பிரசாத் |
| 2 | Steering Committee<br>வழி நடத்துதல் குழு | ராஜேந்திர பிரசாத் |
| 3 | Finance and Staff Committee<br>நிதி மற்றும் பணியாளர் குழு | ராஜேந்திர பிரசாத் |

| | | |
|---|---|---|
| 4 | **Credential Committee**<br>நம்பிக்கைக் குழு | **Alladi Krishnaswami Ayyar**<br>அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் |
| 5 | **House Committee**<br>அவைக் குழு | **B Pattabhi Sitaramayya**<br>பட்டாபி சீதாரமய்யா |
| 6 | **Order of Business Committee**<br>வணிக ஒழுங்குக் குழு | **KM Munshi** |
| 7 | **Ad-hoc Committee on the National Flag**<br>தேசியக் கொடிக்கான தற்காலிக குழு | **Rajendra Prasad**<br>ராஜேந்திர பிரசாத் |
| 8 | **Committee on the Functions of the Constituent Assembly**<br>அரசியலமைப்பு சபையின் செயல்பாட்டுக்குழு | **GV Mavalankar**<br>ஜி வி மாவ்லங்கார் |
| 9 | **States Committee**<br>மானிலங்களுக்கான குழு | **Jawaharlal Nehru**<br>ஜவஹர்லால் நேரு |
| 10 | **Advisory Committee on Fundamental Rights, Minorities and Tribal and Excluded Areas**<br>அடிப்படை உரிமைகள்,சிறுபான்மையினர் மற்றும் பழங்குடியினர் மற்றும் நீக்கப்பட்ட பகுதிகளுக்கான ஆலோசனைக் குழு | **Vallabbhai Patel**<br>வல்லபாய் படேல் |
| 11 | **Minorities Sub-committee**<br>சிறுபான்மையினருக்கான துணைக்குழு | **HC Mookherjee**<br>எச் சி முகர்ஜி |
| 12 | **Fundamental Rights Sub-Committee**<br>அடிப்படை உரிமைகள் துணைக்குழு | **JB Kripalani**<br>ஜே பி கிருபாளினி |
| 13 | **North-East Frontier Tribal Areas and Assam, Excluded and Partially Excluded Areas Sub-Committee**<br>வடகிழக்கு முன்னனி பழங்குடியின பகுதிகள் மற்றும் அசாம் ஆகிய பகுதிகளுக்கான துனைக்குழு | **Gopinath Bardoloi**<br>கோபினாத் பர்தோலி |
| 14 | **Excluded and Partially Excluded Area (other than those in Assam) Sub-Committee**<br>அஸாம் தவிர்த்த வடகிழக்கு குழு | **AV Thakur**<br>ஏ வி தாக்கூர் |
| 15 | **Union Powers Committee**<br>ஒன்றிய அதிகாரக் குழு | **Jawaharlal Nehru**<br>ஜவஹர்லால் நேரு |
| 16 | **Union Constitution Committee**<br>ஒன்றிய அரசியலமைப்புக் குழு | **Jawaharlal Nehru**<br>ஜவஹர்லால் நேரு |
| 17 | **Drafting Committee**<br>வரைவுக்குழு | **BR Ambedkar**<br>பி ஆர் அம்பேத்கார் |

**வரைவுக்குழு**

அனைத்துக் குழுக்களைக் காட்டிலும் வரைவுக்குழு மிக முக்கியமானதாகும் . இது 7 பேரைக் கொண்டு செயல்பட்டது

1. பி.ஆர் அம்பேத்கார்-தலைவர்
2. என்.கோபாலசாமி ஐயங்கார்
3. அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர்
4. டாக்டர் கே எம் முன்ஷி
5. சையது முகமது சாதுல்லா
6. என் மாதவராவ்

**அரசியல் அமைப்புக்குழுவின் கூடுதல் பணிகள்**

அரசியலமைப்பு குழுவானது அரசியலமைப்புச் சட்டத்தினை மட்டும் உருவாக்காமல் அதனோடு கீழ்க்கண்ட பணிகளையும் மேற்கொண்டது

- காமன்வெல்த் அமைப்பில் இந்தியா உறுப்பினராவதற்கான தீர்மானத்தை நிறைவேற்றியது 1949, மே
- தேசியக் கொடியினை ஜீலை,22 1947ல் ஏற்றுக்கொண்டது
- தேசியக் கீதத்தினை ஜனவரி 24,1950ல் ஏற்றுக் கொண்டது
- தேசியப் பாடலினை ஜனவரி 24,1950ல் ஏற்றுக் கொண்டது
- டாக்டர் ராஜேந்திரபிரசாத்தினை இந்தியாவின் முதல் குடியரசுத்தலைவராக தேர்வு செய்தது

| Interim Government (Viceroy's Executive council) 1946<br>வைசிராயின் செயலாட்சிக்குழுவின் இடைக்கால அமைச்சரவை | |
|---|---|
| **Office**<br>**அலுவலகம்** | **Name**<br>**பெயர்** |
| Vice President of the Executive Council<br>செயலாசிக்குழுவின் துணைத்தலைவர் | Jawaharlal Nehru<br>ஜவஹர்லால் நேரு |
| External Affairs and Commonwealth Relations<br>வெளியுறவு மற்றும் காமன்வெல்த் உறவுகள் | Jawaharlal Nehru<br>ஜவஹர்லால் நேரு |
| Agriculture and Food<br>உணவு மற்றும் வேளாண்மை | Rajendra Prasad<br>ராஜேந்திர பிரசாத் |
| Commerce | Ibrahim Ismail Chundrigar |

